# சித்த வைத்திய பயிற்சிப் பட்டறை



இந்து சமுத்திரத்தின் முத்து எனப் போற்றப்படுகின்ற இலங்கையிலும் அயன வலய நாடுகளிலும் பருவ கால சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் இங்கு உண்டாகின்ற நோய்களைப் போக்கவும், இங்குள்ள மூலிகை முதலியவற்றைக் கொண்டே சிகிச்சைகளையும் உள்ளடக்கியது சித்த வைத்தியமாகும். சித்த மருந்துகள் வேதகாலத்துக்கு முற்பட்டவை என்பதுடன் திறன் மிகுந்தவையும் கூட. உடல், உள நோய்களை நீக்குவதும் நோய்கள் வராமல் காப்பதும் நோய்களைத் தடுப்பதும் சித்த மருந்துகளே ஆகும்.

சித்த மருத்துவமானது முழுமுதற்கடவுளாகிய சிவனிலிருந்து உமா தேவிக்கும் பின்னர் நந்தி தேவர், தன் வந்திரி, அச்சுவினி தேவர்கள், அகத்தியர், புலஸ்தியர், தர்மசுவாமி, தேரையர் ஊடாக மக்களை வந்தடைந்தது.

தொன்மைமிக்க சித்த மருத்துவமானது தனது வளர்ச்சியின் இடையில் ஒரு தளர்வு ஏற்பட்டு தற்போது மீண்டும் ஓர் அங்கீகாரம் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் இம்மாநாடானது நடைபெறுவது இதன் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டுவதாக நான் கருதுகிறேன்.

இலங்கையின் வைத்தியத்துறை வரலாற்றிலே முதன்முதலாக சித்த மருத்துவ அலகால் சர்வதேச மாநாடு நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இம்மாநாடானது யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகுடன் இணைந்து இந்தியாவின் ஆயுஷ் அமைச்சு (Ministry of Ayush, Nea Delhi, India), வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், சித்த மருத்துவ போதனா வைத்தியசாலை என்பன ஒன்றிணைந்து சர்வதேச மாநாடு பயிற்சிப்பட்டறை, கண்காட்சி என்பவற்றை நடத்த உள்ளது. இங்கு Ayush என்பது Ay என்றது ஆயுர்வேதம், U என்பது யுனானி, S என்பது மருத்துவம், H ஹோமியோபதி என்பவற்றைக் குறித்து நிற்கின்றன.

எமது சித்த மருத்துவத் துறையானது யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் 34 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு பின் அது அலகாக மாற்றப்பட்டு நேரடியாக துணைவேந்தரின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

தற்போது யாழ். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எமது சித்த மருத்துவ அலகானது யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடமாக தரம் உயர்வு, அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற இச் சந்தர்ப்பத்திலே சர்வதேச மாநாடு நடத்தப்படுவது சிறப்பம்சமாகும். இந்நிலை சித்த மருத்துவத்தை உலகளாவிய ரீதியில் தெரியப்படுத்துவதோடு மட்டுமல்லாது இடையில் ஏற்பட்ட அதன் வளர்ச்சியின் தளர்வுகளையும் நீக்கும் என்பதில் சந்தேகமில்லை.

யாழ்.பல்கலைக்கழகத்தில் 32 வருட வரலாற்றைக் கொண்ட சித்த மருத்துவமானது அண்மைக் காலத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் சித்த மருத்துவ அலகாக இயங்கி வருகின்றது. ஆனால் இந்தியாவில் சித்த மருத்துவமானது அபரிமித வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது மலேசியா போன்ற சர்வதேச நாடுகளிலும் சித்த மருத்துவமானது வளர்ச்சி கண்டுள்ளதை அங்கு நடைபெறும் மாநாடுகளின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் இச் சர்வதேச மாநாட்டில் இந்தியாவிலிருந்து வருகை தரும் வளவாளர்கள், வல்லுநர்கள் , ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்பதன் மூலம் சித்த மருத்துவத்தின் வளர்ச்சியானது இலங்கையில் மேலும் உறுதி செய்யப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் தலைவர் என்ற வகையில் சித்த மருத்துவ மாநாடு எமது அலகில் நடத்தப்பட இருப்பது சித்த மருத்துவம் சார்ந்த வைத்தியர்கள், விரிவுரையாளர்கள், சித்த வைத்தியம் பயிலும் மாணவர்கள், பரம்பரை வைத்தியர்கள் மற்றும் சித்த மருத்துவ ஆர்வலர்கள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இது தனியே மாநாடாக மட்டுமல்லாமல், வட, தென்னிலங்கையிலிருந்து வருகை தரும் பேராசிரியர்கள் மற்றும் வளவாளர்களினால் சித்த மருத்துவத்துக்கே உரித்தான வர்மசிகிச்சை, யோகக்கலை, நாடிப்பரீட்சை, வட தென்னிந்தியாவில் சித்த மருத்துவத்தின் வளர்ச்சி போன்ற பல தலைப்புக்களின் கீழ் மூன்று நாட்கள் பயிற்சிப் பட்டறையானது பெப்ரவரி 23 ஆம், 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இப் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்பதன் மூலம் சிறந்த பலனைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

டாக்டர் விவியன் சத்தியசீலன்
(M.D.(S)) India
தலைவர் சித்தமருத்துவ அலகு
யாழ்பல்கலைக்கழகம்
கைதடி.

---

இப்பயிற்சிப்ப ட்டறையைத் தொடர்ந்து பெப்ரவரி 26 ஆம் , 27 ஆம் திகதிகளில் சர்வதேச மாநாடு நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் சித்த மருத்துவம் சார்ந்த வளவாளர்கள், வல்லுனர்கள் மற்றும் சித்தமருத்துவ ஆராய்ச்சியாளர்களினால் பல்வேறு வகையான ஆய்வுக் கட்டுரைகள் நடத்தப்படவுள்ளன. இவ் ஆய்வுகளின் அறிவுப் பகிர்வானது இலங்கையில் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு மேலும் படிக்கற்களாக அமையும்.

இச் சர்வதேச மாநாட்டில் பெப்ரவரி 23 ஆம், 27 ஆம் திகதிவரை 5 நாட்கள் நடைபெறும் சித்த மருத்துவ கண்காட்சியானது ஒரு வரப்பிரசாதம் ஆகும். அரசாங்க சித்த மருத்துவ வைத்தியர்கள், சித்த வைத்தியம் பயிலும் மாணவர்கள், இலங்கை மற்றும் இந்தியாவின்மூலிகை மருந்தகங்கள் (Herbal Pharmaceuticals), வடக்கு, கிழக்கு சுதேச மருத்துவ திணைக்களம் என்பவற்றின் பங்களிப்புடன் நடத்தப்படவுள்ளது. இக் கண்காட்சியில் பல காட்சிக் கூடங்கள் காட்சிப்படுத்தப்படுவதோடு நவீனமயப்படுத்தப்பட்ட பல மூலிகைத் தயாரிப்புக்கள் (Herbal Products) பற்றிய பூரண விளக்கங்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இக் கண்காட்சியில் 500 க்கும் மேற்பட்ட மூலிகைகள் குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் இலங்கைக்கு உரித்தான தனித்துவமான மூலிகைகள் உட்பட இனங்காண்பதற்குரிய பல வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிலவற்றின் பரம்பலை விஸ்தரிக்கும் நோக்கில் வீடு மற்றும் பாடசாலைத் தோட்டங்களில் நடுகை செய்வதற்கான மூலிகை நாற்றுக்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

அத்தோடு சித்த மருத்துவ வளவாளர்கள், சித்த மருத்துவ மாணவர்களால் நோய்களுக்கான விளக்கங்கள் ,அவற்றுக்கான சிகிச்சை முறைகள் மற்றும் நோய் வராமல் தடுப்பதற்கான வழிமுறைகள் என்பவற்றைப் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதோடு இலவசமாக நோய்களுக்கான சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், தாய்மார்கள் மற்றும் பொது மக்கள் இவ் ஐந்து நாட்களில் சித்த மருத்துவம் சார்ந்த அனைத்து விளக்கங்களையும் ஒரே குடையின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

கடந்த வருடம் சித்த மருத்துவ அலகில் தேசிய மாநாடும், கண்காட்சியும் நடைபெற்றதன் மூலம் பல ஆய்வாளர்கள், சித்த மருத்துவ வைத்தியர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர் என்பதை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர விரும்புகிறேன்.

வட, தென்னிந்திய, மலேசியா போன்ற சர்வதேச நாடுகளிலிருந்து வரும் வளவாளர்களினால் சித்த மருத்துவம் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்படவுள்ளதால் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் தமது பட்ட மேற்படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் அமையுமென நான் கருதுகிறேன்.

மேற்படி சித்த சர்வதேச மாநாட்டிலும் பயிற்சிப்பட்டறையிலும் கலந்துகொள்ள இருக்கும் அரசாங்க சித்த வைத்தியர்கள், பாரம்பரிய சித்த வைத்தியர்கள், அரச தனியார் சித்த ஆயுர்வேத யுனானி மருத்துவர்கள் பின்வரும் இணைய முகவரியுடன் தொடர்புகொண்டு தங்களைப் பதிவு செய்து விளைத்திறன் மிக்க பயன்பாடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

http:// www.siffdha.jfn.ac.ik/ index.php/ international – Confen. ce.and exhibition/n. siddha.medicine. Icesm 2018